# முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பதாரர்களில்

# தகுதியான மகளிருக்கு டிச.15 முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

## பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 17 - “முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கு டிச.15 முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும்” என்று சட்டப் பேரவையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான விவாதத்தின் போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை’ பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி வைத் தார்கள். மகளிரின் பொருளாதார விடுதலைக் குத் துணை நிற்கின்ற இந்தத் திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 14 இலட்சம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்வழங்கிவருகின்றார்கள்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 26 மாதங்களாக, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி, இந்த ஆண்டு வரை இன்றைக்கு 16 ஆம் தேதி; ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் கொடுத்தாகிவிட்டது. தமிழ்நாட்டு மகளிருக்கு, இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 இலட்சம் மகளிர் ஒவ்வொருவருக்கும் சுமார் 26 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசு கொடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



### சில விதிகள் தளர்வு!

இத்திட்டத்தில், கூடுதலான மகளிர் பயனடைய வேண்டுமென்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் சில விதிகளை தளர்த்திக் கொடுத்தி ருக்கிறார்கள். உதாரண மாக, அரசு மானியத்தில், 4 சக்கர வாகனம் வைத்திருக்கும் குடும்பங்கள், OAP பெறும் குடும்பங்கள் ஆகியவற்றில், விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளி ருக்கும் உரிமைத் தொகை சேர்த்து வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சூழலில், நம்முடைய அரசு, அரசு சேவைகள் மக்களைத் தேடி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை 19.06.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த முகாம்களில், கிராமப்புறங்களில் 15 துறைகளின் வாயிலாக 45 சேவை களும், நகர்ப்புறங்களில் 13 துறை களின் வாயிலாக 43 சேவைகளும் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த முகாம்கள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழும் மனுக்கள் ஏற்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக, நவம்பர் 15ஆம் தேதி வரை 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம், 15.10.2025 வரை 9 ஆயிரத்து 55 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்கள் மத்தியில், இந்த முகாம்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இதுவரை, உரிமைத் தொகை வேண்டி 28 இலட்சம் மகளிர் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் விண்ணப் பங்களை அளித்துள்ளனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” முகாம்கள் நவம்பர் 14, 2025 அன்று முடிவடைய உள்ளன. இதற்கிடையே, புதிதாக உரிமைத் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வருவாய்த் துறைமூலம் Field Inspection செய்யப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் அனைத்தும் நவம்பர் 30, 2025க்குள் முடிவடையும் என்று கூறிக் கொள்கிறேன்.

முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கு வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங் கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த செய்தியை இந்த மாமன்றத்தின் வாயிலாக உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மகளிரின் பொருளா தார தன்னிறைவுக்கு என்றும் நம்முடைய திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்று கூறிக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

### தூய்மை அருணை - அருணை மருத்துவமனை சார்பில், இதுவரை 230 வெற்றிகரமான பிரசவம்!

# மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா!

### காவல் கண்காணிப்பாளர் எம்.சுதாகர் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தினார்- எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

*திருவண்ணாமலை. அக் 17 -*

*திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. காவல் கண்காணிப்பாளர் முனைவர் எம். சுதாகர் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.3முறை நடைபெற்ற வளைகாப்பு விழாவின் மூலம் அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 230 வெற்றிகரமான சுகப்பிரசவங்கள் நடைபெற்றுள்ளன.*

*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு*

*39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.*

*16.10.2025 வியா ழக்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.*

*விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகித்தார்.*

*அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.*

*தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.*

*மகப்பேறு மருத்துவர் கவிதா அவர்கள் மருத்துவ ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.*

*விழாவில் கலந்து கொண்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் எம்.சுதாகர் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார். அவர் உரையாற்றும்போது...*

*நான்காவது முறையாக இந்த வளைகாப்பு நிகழ்ச்சியினை தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து நடத்துகிறது. கர்ப்பிணி தாய்மார்கள் பிரசிவித்த பின்பும் தாய்சேய் நலம் பேணுவது குறித்து மருத்துவமனை அக்கறையோடு இருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.*

*வாழ்க்கையில் பெண்களுக்கு பிரசவ காலம் என்பது மிக முக்கியமான ஒன்று. பெண்களுக்கு சவாலானதும்கூட, அருணை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உங்கள் கூடவே இருந்து உங்கள் பிள்ளை பேற்றை உடனிருந்து கவனிக்கிறது.*

*டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டம் ஒரு அற்புதமான திட்டம். அந்த திட்டத்தொகையை மருத்துவமனை உங்களுக்கு பெற்றுத் தருகிறது. பிரசவ இடர்பாடுகளை களைந்து, சுகப் பிரசவம் நடைபெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் அருணை மருத்துவமனையை நான் பாராட்டுகிறேன். உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமைந்திட வாழ்த்துகிறேன். இவ்வாறு உரையாற்றினார்.*

*சி.இ.ஓ. டாக்டர் அசோக் தியாகராஜன் உட்பட பல மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.*

*நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் இல.குணசேகரன் நன்றி கூறினார்.*

*விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன் ஆகியோர் செய்திருந்தனர்.*


**பெருநகர சென்னை மாநகராட்சி**

**மத்திய வட்டாரம் / இயந்திர பொறியியல் துறை**

இ. பொ. து. ம. வா. ப. ந. க. எண். சி / 287 / 2025

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

**பெருநகர சென்னை மாநகராட்சி - 08 எண்ணிக்கையிலான டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் மகளிர் ஒப்பனை அறைக்கான 270 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பம் (ஒப்ப விதிகளின்படி)**

முன் வைப்பு தொகை **ரூ.95,000/-** ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **03.11.2025** மதியம் **3.00** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் :**- 04.11.2025** மதியம் **3.30.** மணி

மேலும் விபரங்களுக்கு: **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்

செ.ம.தொ.இ / 5690 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்)**





திருவண்ணாமலை தூய்மை அருணை – அருணை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய வளைகாப்பு நிகழ்ச்சியில் காவல் கண்காணிப்பாளர் முனைவர் எம்.சுதாகர் கலந்து கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்தினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், டாக்டர் குணசிங், டாக்டர் அசோக், டாக்டர் கவிதா மற்றும் ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.

---


### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# 2394 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன!

### சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை, அக்.17 -*

*சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது காங்கிரஸ் உறுப்பினர் ரூபி மனோகரன் கேள்விக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலளிக்கும் போது “முதல்வர் மு.க. ஸ்டாலினின் ‘திராவிடமாடல்’ ஆட்சியில் 2394 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன” என்று கூறினார்.*



**ரூபி மனோகரன்:** *நாங்குநேரி தொகுதி, உன்னங்குளம் ஊராட்சி, குசவன்குளத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் :** *நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, உன்னங்குளம் ஊராட்சியில் உள்ள குசவன்குளத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.*

*திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஸ்ரீராமானுஜம் கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் உள்ள உன்னங்குளம் முழுநேர நியாயவிலைக் கடையானது 551 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில், புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் குசவன்குளம் பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளும் அடங்கும்.*

*மேலும், உன்னங்குளம் முழுநேர நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் குசவன்குளம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. ஆகும்.*

*எனவே, அரசு நிபந்தனைகளின்படி கிராமப் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், அங்காடி பிரிக்க ப்பட்ட பின் தாய்க் கடையில்குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தி யாகவில்லை. எனவே, குசவன்குளம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

*நியாய விலைக்கடைகளை புதிதாக உருவாக்க*

*நகரப் பகுதி 800 குடும்ப அட்டைகள்*

*கிராமப் பகுதி 500 குடும்ப அட்டைகள்*

*மலைப்பகுதி 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் ஏறத்தாழ 2394 புதிய நியாய விலைக்கடைகள் இந்த ஆட்சியில் தொடங்கப் பட்டுள்ளன.*

*அவற்றில் 1605 பகுதி நேர , 789 முழு நேர நியாய விலைக்கடைகள் உள்ளன.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

### அக்டோபர் 17 (1993)



**‘தஞ்சை மாவட்ட பெரியார்’ என்று போற்றப்பட்டவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.**

**தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது “பெரியார் விருது” பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**